# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 34/2019**

DEPOSITION OF WITNESS : P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிகண்டன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2019

முதல் விசாரணை:

நான் தற்போது வருசநாட்டில் குடியிருந்து வருகிறேன். மொபைல் சர்வீஸ் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கு சம்பந்தமாக தற்போது சமாதானமாக சென்றுவிட்டோம். சென்ற வருடம் இரவு 8 மணியளவில் நானும் எனது அம்மாவும் வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே சத்தம்கேட்டு என்னவென்று பார்த்தபோது அடையாளம் தெரியாத சிலர் என்னையும், கவியரசன் என்பவரையும் தள்ளிவிட்டதில் எனக்கு காயம் ஏற்பட்டது. அதனால் நான் சந்தேகத்தின்பேரில் வருசநாடு காவல் நிலையம் சென்றபோது என்னிடம் புகாரில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு அனுப்பிவிட்டார்கள். புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக் கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு கு.வி.

கடந்த 06.11.2018 அன்று பகல் 3 மணியளவில் நானும் எனது அம்மாவும் எங்களது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் அனைவரும் அங்கு வந்து பாட்டி இறந்ததற்கு ஏன் வரவில்லை, அப்பத்தான் உங்களுக்கு சொத்து கொடுப்போம் என்று சொன்னதற்கு அதற்கு எனது அம்மா 12 வருடங்களாக உங்களுக்கும் எங்களுக்கும் பேச்சு வார்த்தை இல்லை, அதனால் எங்களை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று சொன்னபோது எதிரிகள் 4 பேரும் எனது அம்மாவை தகாத வார்த்தைகளால் பேசியதால் நான் ஏன் தகாத வார்த்தைகளால்

திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு என்னை உதயசூரியன் என்பவர் கம்பு எடுத்து வலது காது, வது கையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றும், மேலும் உதயசூரியன் என்பவர் இடது தோள்பட்டையிலும், வலது பிடரியிலும் பல்லால் கடித்து காயப்படுத்தினார் என்றும், அப்போது கவியரசன் என்பவர் சண்டையை விலக்கவிட வந்தபோது உதயசூரியன் என்பவர் கவியரசன் வலது மணிக்கட்டில் கடித்து காயப்படுத்தினார் என்றும், போகும்போது உதயசூரியன் என்பவர் எனது அம்மாவையும் பார்த்து இன்னைக்கு தப்பித்துக் கொண்டீர்கள், எப்போது இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச் சென்றார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.